# காரைநகரில் 6 கடற்படை பலி; சுபராஜ் வீரமரணம்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வெளியேறி ரோந்து செல்ல முயற்சித்த சிறிலங்கா கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறு கடற்படையினர் கொல்லப்பட்டனர். பல கடற்படையினர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்கிக் கால்களை இழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களின் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. விடுதலைப் புலிகள் தரப்பில் சுபராஜ் என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்றைய தினம் சிறிலங்கா கடற்படையினர் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வெளியேறி காரைநகர் பஸ் டிப்போ வரை ரோந்து செல்ல முயற்சித்த போது விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

காலை 5.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பகல் 11.30 மணிக்கு கடற்படையினர் பின்வாங்கும் வரை நீடித்தது. இத் தாக்குதலில் ஆறு கடற்படையினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹு ஐப்பசி மீ 30 வ வெள்ளிக்கிழமை (16-11-1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 27 ஓசை 262

## மகாவலி பி.சி.வலயங்களுக்கு 1200 சிங்களவர் வந்தனர்

(மாத்தறை)

கிழக்கு மாகாணத்தில் உள்ள மகாவலி பி. சி. வலயங்களில் குடியமர்த்துவதற்கு மாத்தறைப் பகுதியில் இருந்து 660 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து 550 பேரும் தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என மகாவலி அபிவிருத்தித்துறை அமைச்சர் காமினி அத்துக்கோறளை தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறை மாவட்ட 'சென்றல் காம்ப்' 12ஆம் கொலனி

# 6 இராணுவ காவலரண்களை புலிகள் கைப்பற்றினர்

## படையினரின் உடல்களும் ஆயுதங்களும் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் "சென்றல் காம்ப்" பன்னிரெண்டாம் கொலனியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவத்தினரின் ஆறு காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி அவற்றைக் கைப்பற்றினர். தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவமும் ஊர்காவற்படையும் ஓட்டம் எடுத்தன.

இந்தத் தாக்குதலில் புலிகள் இராணுவத்தினரின் மூன்று இறந்த உடல்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றினர்.

இந்தக் காவல் அரண்களைக் கைப்பற்றுவதற்காக நேற்று அதிகாலை 2.30 மணிக்கு ஏற்பட்ட மோதல் நீண்ட நேரமாக இடம் பெற்றது. இத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே பலியாயினர். ஏனைய இராணுவத்தினர் இறந்தவர்களின் சடலங்களையும் கைவிட்டு விட்டு காயமடைந்த நிலையில் இராணுவ முகாமுக்குள் ஓடித் தப்பி விட்டனர்.

மட்டுநகர், அம்பாறை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினர் பாரிய தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீர மரணம் முஸ்தபா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை இராணுவ முகாம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் சாந்தசந்தியடியில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்த முஸ்தபா என்ற (கிட்ணர் சந்திரசேகரன் - புத்தூர் கிழக்கு புத்தூர்) போராளி நேற்று முன்தினம் வீர மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (4)

## இரு போராளிகள் விபத்து மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப்பகுதியிலுள்ள கச்சாயில் நேற்று முன்தினம் ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றில் கண்ணன் (நாராயணசாமி, செல்வகிருஷ்ணன், சுழிபுரம் மத்தி) என்பவர் மரணமடைந்தார். இதேதினம் இன்னோர் விபத்துச் சம்பவமொன்றில் அமலன் (செல்வராசா கேதீஸ்வரன், சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை) என்பவர் மரணமடைந்தார்.

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (மு)

## கண்ணிவெடியில் 3 அதிகாரிகள் பலி

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் புலிகளின் கண்ணிவெடியில் இராணுவ ட்றக் ஒன்று சிக்கி முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதில் பயணம் செய்த மூன்று இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர் என கொழும்பில் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து

# கிராமங்கள் நோக்கிச் ஷெல்தாக்குதல் 5 பொதுமக்கள் பலி; 10பேர் காயம்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாமில் இருந்து நேற்று முன்னேற முயன்ற படையினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலினால் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கிச் சென்று முகாமினுள் முடங்கிய படையினர் அங்கிருந்து பொதுமக்கள் குடியிருப்புக்களைநோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொண்டதில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர் பலர் காயமடைந்தனர்.

ஐ. இரஞ்சிதமலர் (வயது 29), ச. செல்வராணி (வயது 16), ஐ பராசக்தி(வயது51), தவமலர் (வயது 23), இராஜேஸ்வரி என்பவரின்குழந்தை ஆகியோர் கொல்லப்பட்டனர்

சிவகுசலா (வயது15), சறோஜினிதேவி (வயது 16), கஜேந்திரன் (வயது 5), மீனாம்பாள் (வயது10), கண்மணிதேவி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் குண்டு வீச்சு

(கொடிகாமம்)

நேற்றுக்காலை ஆறு மணி தொடக்கம் எட்டுமணிவரை கொடிகாமத்தை அண்டிய கிராமங்களில்பொம்மர்களும், ஹெலியும், அவ்ரோவும் மோசமாக தாக்குதலை நடத்தின.

மூன்று பொம்மர், ஒரு அவ்ரோ விமானம், ஒரு ஹெலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டையில் 100 படைபலி ஹமில்டன் வனசிங்கா பேட்டி

(கொழும்பு)

யாழ். கோட்டை முகாம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலின்போது நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர் என சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா லங்கா கார்டியன் இதழுக்கு அளித்த பேட்டியொன்றில்தெரிவித்துள்ளார்.

# வியட்நாம்போராளிகள் தந்திரத்தை புலிகள் கடைப்பிடிக்கிறார்கள்

\- அனுரா பண்டார நாயக்கா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வியட்நாம் போரிலே வியட்கொங் கெரில்லாக்கள் கடைப் பிடித்த அதே தந்திரோபாயத்தையே மன்னாரிலும் கடைப்பிடிக்கிறார்கள் என அநுரா பண்டார நாயக்கா பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

கடந்த பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு பேசிய அநுராபண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாமில் ஆண்கள், பெண்கள் கைது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள சீனன்குடா கிளப்பன்போர்க் அகதிமுகாமில் இருந்து ஆண்கள், பெண்கள் உட்பட பல தமிழ் மக்களை சிறிலங்கா இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இணைந்து கைது செய்து இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த சம்பவத்தின்போது ஆலங்கேணியைச் சேர்ந்த சுந்தர், நாதன் (வயது 35), சின்னையா (வயது 33), கொப்பிளார் (வயது 26), கமலா (வயது 25), கனகலிங்கம் (வயது 35), சித்திரபாலன் (வயது 50), நெல்லிநாதன் (வயது 19), அன்னம்மா ஆகியோரும் பன்குளத்தைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

விளம்பரம்

### ரதிவோச் வேக்ஸ்

ரதிவோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியிலிருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோவில் உபதபால் அலுவலகத்துக்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம் திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B. 1580)

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60, ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது: சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங்களும், பற்றறிகளும் விற்பனைக்குண்டு. கிளை ஸ்தாபனம்: 153A, பலாலி வீதியிலும் நடைபெறுகின்றது. (B/1586)

### தேவை

அனுபவமுள்ள ரீமேக்கர், சப்பிளை செய்வோர், திரும்பவும் ஆரம்பிக்கவுள்ள எமது ஸ்தாபனத்திற்கு உடனடியாகத் தேவை. தகுதியுள்ளவர்கள் நேரில் வரவும். பெசம்பே ஜெய் சுவீற்ஸ், 260, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (R/833)

### தேவை

வெற்று சிமெந்து, கோழித்தீன் பைக்கற்றுக்கள் தேவைக்கில்லவற் - யாழ்ப்பாணம் (B/1590)

## மாவீரர் தினத்தை ஒட்டி பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

எதிர் வரும் மாவீரர் தினத்தையொட்டி தீவகம் சார்பாக மாபெரும் பொதுக்கூட்டமொன்று 27 ஆம் திகதி புங்குடுதீவு மகாவித்தியாலய முன்றலில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஊர்வலங்களும் நடாத்தப்படவுள்ளன. ஊர்வலங்கள் ஊர்காவற்றுறையில் இருந்து ஆரம்பமாகி வேலணை மார்க்கமாக புங்குடுதீவு சென்றடையும். (15)

# யாழ். வைத்தியசாலையினுள் திருக்குறளும் மணிமொழிகளும்

(யாழ்ப்பாணம்)

மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதிச் சுவர்களில் வள்ளுவர் அருளிய வாக்குகளும், மற்றும் தமிழ் மணிவாசகங்களும் எழுதப்பட்டுள்ளன. அவை சுவர்களை அலங்கரிக்கின்றன. ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'' என்ற வள்ளுவரின் குறள் வெளிநோயாளர் பகுதி நுழைவாயிலில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உள்சுவரொன்றில் கணியன் பூங்குன்றன் என்னும் பழந்தமிழ்ப் புலவரின் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற வாக்கியத்திற்குப் பதிலாக, 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்று பிழையாக எழுதப்பட்டுள்ளது சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா என்று ஒரு தமிழ் ஆசிரியர் பொறுப்போடும், கவலையோடும் கேட்டார்.

UNIVERSITY OF JAFFNA.

Applications will be received by me from suitable candidates for the following post upto 21st November, 1990.

**Post :** CASUAL NURSE

**Salary:** Rs. 83. 40Cts + Other allowances payable by the University.

**Qualifications:**

1. G. C, E. (O/L) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects.

2. Certificate of Competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

Age : Not more than 40 Years,

Note: Contract appointments will be considered

Applicants are requested to apply together with their Bio-datas Qualified applicants are also requested to present for an Interview scheduled to be held on 23rd November. 1990 at 10-00 a m in the Board Room of this University.

— REGISTRAR

University of Jaffna.
Thirunelvely,
Jaffna.
1990 11. 14

(B .1594)

## மின்சார வயர்கள் திருட்டு

(மானிப்பாய்)

கடந்த சில நாட்களாக வலி. தென் மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராமப் பகுதியில் சில இடங்களில் மின்சார வயர்கள் திருடப்பட்டதனால் மின்சாரம் கிடைக்கும் பட்சத்தில் நவாலி கொத்... கட்டி வீதி, பிரசாத் வீதி, சுதுமலை கச்சியப்பா வீதிகளுக்கு மின்சாரம் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட வயர் தற்போது தம்மிடம் கையிருப்பில் இல்லை எனவும் இவை கொழும்பில் இருந்து வந்தால் மட்டுமே இப்பகுதிகளுக்கு இணைப்பை ஏற்படுத்த முடியும் எனவும் இதன் பொறுப்பதிகாரி சி, எஸ். பாலா என்பவர் தெரிவிக்கிறார். (ச)

# கன்சவேட்டிவ் தலைமைக்கு தட்சருக்கு பலமான எதிர்ப்பு

(லண்டன்)

பிரித்தானியாவில் கன்சவேட்டிவ் கட்சியின் தலைமைப் பதவிக்கு பிரதமமந்திரி மார்கிரட் தட்சருக்கு எதிராக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஜெபரின் போட்டியிடுகிறார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் லண்டனில் மைக்கல் ஜெபரின் அறிக்கை ஒன்றை விடுத்தார். இதில் அவர் கன்சவேட்டிவ் கட்சியின் நான்காவது தேர்தல் வெற்றிக்கு இட்டுச் செல்ல தன்னால் மட்டுமே முடியும் என அறிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் மார்கிரட் தட்சர் ஐரோப்பிய விவகாரங்கள் தொடர்பாக தனது அமைச்சரவையின் ஒற்றுமையை ... பணவில்லை எனவும் ... தெரிவித்தார். ஜிப்ரிஹொவின் பதவி விலகலுக்கும் இத்தலைய பிரச்சினையே காரணம் என்றும் ஆதலால் தான் கன்சவேட்டிவ் கட்சியின் வெற்றிக்காக எதிர் காலத்திற்காக தான் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதற்கான தேர்தல் வரும் செவ்வாய்க் கிழமை நடைபெறவுள்ளது.

# வளைகுடாப் பிரச்சினைக்கு ஐ. நாவுக்கு மத்தியஸ்தவாய்ப்பில்லை

## பெரஸ்டி கொயிலர்

(டோக்கியோ)

வளைகுடாப் பிரச்சினைக்கு ஐ. நா மன்றத்தலைமைச் செயலகத்தின் மத்தியஸ்த முயற்சிக்கான வாய்ப்புக்கள் இல்லையென தலைமைச் செயலாளர் பெரஸ்டி கொயிலர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜப்பானில் அந்த நாட்டின் பிரதமர் ரொசிக்கிகையூமைச் சந்தித்த தலைமைச் செயலாளர் தெரிவித்தார். இதற்கு முன்னதாக தாம் ஜோர்டானுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு வளைகுடாப் பிரச்சினை குறித்து பேசியதாகவும் அதுவும் வெற்றியளிக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆனால் நடைபெற இருக்கும் அரபுலீக் உச்சி மாநாடு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வழிவகுக்கும் என தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஜப்பானியப் பிரதம மந்திரி ரொசிக்கி கையூமும் பேச்சுவார்த்தை மூலமே இந்தப் பிரச்சினை தீர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

## விமான விபத்தில் 47 பேர் பலி

(ரோம்)

இத்தாலியில் இருந்து சுவிற்சலாந்திற்கு சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 47 பேர் வரை உயிர் இழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மிலானில் இருந்து சூரிச்சுக்கு சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் ஒன்று 40 பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்றது. இதில் மீதி 7 பேரும் அதில் கடமை செய்தவர்கள் ஆவர்.

இந்த விமானம் சூரிச்சில் தரை இறங்க முற்பட்டபோது குன்று ஒன்றுடன் மோதி நொருங்கியதாகவும் இதில் சென்ற அனைவரும் உயிர் இழந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# ஓய்வூதியத்திட்டம் தமிழர்களின் கல்வியைப் பாழடித்து விடும்

(பண்டத்தரிப்பு)

ஓய்வூதியம் பெறத் தூண்டும அரசாங்கத்தின் புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சுமார் 80 வீதமான தமிழ் ஆசிரியர் இளைப்பாறத் தூண்டப்படுகின்றார்கள். இதனால் தமிழரின் கல்வி பாழடைந்து விடும். இவ்வாறு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஆசிரியர் பிரதிநிதிகள் மத்தியில் நல்லூர் புதிய பணிமனையில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

பெரும்பான்மையான தமிழ் ஆசிரியர்கள் வெளியேறினால் அனுபவம் குறைந்த ஆசிரியர்கள், சேவைப் பயிற்சி இல்லாத தொண்டர் ஆசிரியர்கள், பயிலுநர் ஆசிரியர்களில் எமது சிறார்களின் எதிர்கால கல்வி தங்கும் நிலை உருவாக்கப்படுகின்றது. தமிழ் இனத்தை அழிக்க வகுத்த இத் திட்டத்திற்கு நாம் இரையாகக் கூடாது. ஆகவே தமிழ் இனத்தைப் பலவீனப் படுத்தும் இத் திட்டத்தின் மீது எமது சங்கம் சந்தேகம் கொள்கிறது என்றும் அவர் தொடர்ந்து பேசும் போது தெரிவித்தார். (12)

## இளைஞர் பேரவையின் விசேட கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத்தலைவர் திரு.வே. கெ.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீனகுருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரையுடன் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு சகல இந்து சமய நிறுவனங்களும், ஆலய தர்மகர்த்தாக்களும் அழைக்கப்படுகின்றனர். இடம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களதும், தாக்கப்பட்டுவரும் இந்து ஆலயங்களினதும் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்குமான கலந்துரையாடலாக இக்கூட்டம் அமைய உள்ளதால் சகலரையும் கலந்து தமது கருத்தை வெளிப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (24)

### கலைப்பீடம் - சிறப்புக்கலை
### வர்த்தகம் - முகாமைத்துவம்

மேற்படி பயிற்சி நெறிக்கான இறுதி ஆண்டு சகல மாணவர்களும் தமது ஆய்வுக்கட்டுரையை 30-11-90 க்கு முன்பாக பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாகச் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(B/ 1596) -பதிவாளர்

## NEW BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

**கலை, வர்த்தகம்**
**A/L 90, 91, 92.**
வழமையான ஆசிரியர் குழுவினால்
**ஆரம்பம்: 17-11 90**
**சனி காலை 9-00 A. M.**

(R/ 835)

## 151 ஆவது நினைவு நாளும்
### அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

வீரஜனனம் 21 - 01 - 1970



வீர மரணம் 16 - 06 - 1990

## வீரவேங்கை விமலன்
### (ஐயம்பிள்ளை செல்வராசா)

தமிழினம் காக்கத் தரணியில் உதித்தவனே!
வீரத்தின் சிகரமாய் வீரவேங்கையாய்
நின்றவனே விமலா! நின்னைப் பிரிந்தோமே
மாங்குள மண்ணிலே மார்பிலே குண்டேற்று
வீரமறவனாய் வீரர் திலகமாய்
விடுதலை வேள்வியில் தியாகச் சுடராய்
சமர் பல புரிந்து சரித்திரம் படைத்தவனே!
அமர்க்களத்திலே அணையாத தீபமாய்
நின்று நிலைத்திடுமே நின்தன் திருநாமம்
ஈழ அன்னையின் இதய தாமரையில்
வாழ வழிசமைத்த வீரனே எங்குற்றாய்?
தமிழீழ மக்களின் தணியாத அஞ்சலிகள்!

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. - குடும்பத்தினர்.

(B/1595)

## சிந்தனைக்கு

நம் கொள்கைகள், நம் செயல்களின் ஊற்றுக்கண், நம் செயல்கள் நம் இன்பத்தின், துன்பத்தின் ஊற்றுக்கண். ஆகவே நம் கொள்கைகளை வகுப்பதில் எவ்வளவு கவனம் செலுத்தினாலும், அது மிகையாகாது.

-ஃபிலிப்ஸ்கெல்ட்டன்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 16-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகம்: 2208
த.பெ.எண் 65


# முஸ்லிம்களை ஏமாற்றிய சிங்கள பௌத்தம்

சிறிலங்காவில் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இலக்கு தமிழருக்கு எதிரானது மட்டுமல்ல, சிங்கள பௌத்தர் அல்லாதோர் அனைவருக்கும் என்பதை தற்போது உணர்த்தத் தொடங்கியுள்ளது. இதற்கான சிவப்பு விளக்கு இப்பொழுது முஸ்லிம்களுக்குக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில், குறிப்பாக கிழக்கில் தமிழர்களை அழித்தொழிப்பதிலும், துரத்தியடித்தலிலும் சிறிலங்கா பௌத்த சிங்கள பேரினவாதம் முஸ்லிம்களைப் பயன்படுத்தி வருகின்றது. குறிப்பாக அம்பாறை, திருமலை மாவட்டங்களில் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு தமிழரை துரத்தியடிப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் அரசாங்கத்திற்கு ஒத்துழைத்தன. அதாவது முஸ்லிம்கள் உரிமைகளுக்கு யார் உண்மையான எதிரிகள் என்பதை அறிந்து கொள்ளாமல் முஸ்லிம் தலைமைகள் தமிழர்தான் தடையாக உள்ளனர் என்பது போன்று செயற்பட்டன. இன்று முஸ்லிம் மக்களின் உண்மையான எதிரி யார் என பௌத்த சிங்களப் பேரினவாதம் காட்டத் தொடங்கிவிட்டது.

முதலில் இதை வெளிக்காட்டியவர் பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன. அவர் முஸ்லிம்களுக்கு இன்று வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமையே காரணம் எனத் தெரிவித்தார்.

அடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களில் ஒருவரான அநுரா பண்டாரநாயக்கா, முஸ்லிம்களின் இன்றைய நிலைக்கு முஸ்லிம் காங்கிரஸ்கட்சித் தலைவர் அஷ்ரப்பே காரணம் என்கிறார்.

அடுத்து வெளிக் காட்டியுள்ளவர் அமைச்சர் பி. தயாரெட்ன. அவர் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளை உள்ளடக்கிய ஒரு முஸ்லிம் மாகாணம் அமைவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளதோடு, சில முஸ்லிம் தலைமைகள் பொறுப்பற்ற போக்கைக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் முஸ்லிம்களுக்கு ஆசையூட்டி தமது தேவையை முடித்துக்கொள்ள முற்பட்டது. ஆனால் இன்று பிரச்சினை வேறுபக்கம் திரும்பியபோது முஸ்லிம்களை காட்டிக் கொடுக்கத் தொடங்கியுள்ளது. முஸ்லிம் தலைமைகள் சிங்கள பௌத்த பேரினவாதத்தால் ஏமாற்றப்பட்டுவிட்டன.

அதாவது பௌத்த சிங்கள பேரினவாதம் கிழக்கை தமிழரிடம் இருந்து தான் ஆக்கிரமிக்க எண்ணியிருக்கிறதே ஒழிய தமிழரை விரட்டி முஸ்லிம்களிடம் தரை வார்க்க அது ஒருபோதும் சித்தமாக இருக்கவில்லை. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு முஸ்லிம் விவசாயிகளின் காணிகளை அபகரித்து மேற்கொள்ளப்பட்ட தீகவாவிப் புனித நகரத்திட்டமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிகழ்ந்த சிங்களக்குடியேற்றங்களின் பின் 1981ஆம் ஆண்டுக் கணிப்பின்படி முஸ்லிம்களும், சிங்களவர்களும் சமபலம் பெற்றிருந்தார்கள். (ஏறத்தாழ 40 வீதம்) தமிழர் 20 வீதம் அளவில் இருந்தார்கள். அங்கிருந்து தமிழர்கள் விரட்டப்பட்டு விட்டால் அம்பாறையில் முஸ்லிம்களும் சிங்களவரும் சமபலம் பெறுவார்கள். இதனால் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக இருந்த தன்மை மாறி முஸ்லிம்களும் சிங்களவரும் சமபலம் பெற வாய்ப்பு ஏற்படும்.

இந்த நிலையில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் நிகழ்த்தி முஸ்லிம்களையும் சிறுபான்மை ஆக்குவதே சிறிலங்கா பௌத்த பேரினவாதத்தின் திட்டமாகும்.

மேலும் 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் இருந்த ஐந்து தேர்தல் தொகுதியில் மூன்று முஸ்லிம்களிடமும் ஒன்று சிங்களவரிடமும் ஒன்று தமிழரிடமும் இருந்தன ஆனால் 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஏழு தொகுதிகளில் ஒன்று மட்டுமே முஸ்லிம்களிடம் சென்றது. ஒன்று தமிழரிடமும் ஐந்து சிங்களவரிடமும் சென்றுள்ளன. அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

அம்பாறையில் ஏற்பட்ட நிலையை ஒத்த தன்மையே திருமலையிலும் ஏற்படும். 1981இல் மூன்று இனங்களும் சமமான அளவில் வாழ்ந்த அந்த மாவட்டத்தில் இன்று பெருமளவில் தமிழர் வெளியேற்றப்படுவதனால் அங்கு அந்த இடத்தை நிரப்புவதற்கு சிங்களக் குடியேற்றங்களே இடம் பெறுகின்றன இந்த நிலையில் அங்கும் சமபல நிலை பாதிக்கப்பட்டு முஸ்லிம்கள் அங்குசிறுபான்மையினர் என்ற நிலையே ஏற்படும். ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலைமை அதிகாரத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட முஸ்லிம் தலைமைகளினாலேயே ஏற்பட்டது. ஆகையினால் இன்றைய முஸ்லிம் மக்களின் திக்குத் தெரியாத அவல நிலைக்கான பொறுப்பை முஸ்லிம்களின் தலைமைகள் ஏற்கத்தான் வேண்டும்.

# உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்...






திரு. மாத்தயா அவர்கள் அகதிகளிடம் விடைபெற்று வாகனத்தில் ஏறினார். செல்லும் வழியெங்கும் சிறு குடில்களை அமைத்து ஏராளமான அகதிகள் தங்கியிருப்பது தெரிந்தது. வாகரையை அடைந்ததும் மதிய உணவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இடத்தில் தங்கினோம். அப்போது ஒரு செய்தி வந்தது. யாழ். கோட்டையைப் போராளிகள் கைப்பற்றி விட்டார்கள் என்று. அன்று திலீபனின் நினைவுநாளைமுன்னிட்டு சில இடங்களில் நினைவுக் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மட்டக்களப்பு நகர் முழுவதும் விழாக் கோலம் பூணுகிறது. மக்கள் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றார்கள் என்றும் செய்தி வந்தது. மாத்தயாவை ஊர் மக்கள் பலரும் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மகளிர்படைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருக்கும் ஜெயாவும் வந்து சந்தித்துச் சென்றனர்.

அங்கிருந்து நாம் நீண்ட தூர பிரயாணத்தின் பின் ஒரு முகாமைச் சென்றடைந்தோம். 28 09.90 வரை இந்த முகாமிலேயே தங்கினோம். 28 09.90 மாலை அந்த முகாமிலிருந்து புறப்பட்டோம். எம்மை அழைத்துச் செல்ல மட்டக்களப்புத் தளபதி கருணா புறப்பட்டு வந்தார். வழியில் எம்மைச் சந்தித்து அழைத்துச் சென்றார். ஒரு மணித்தியாலம் நடக்க வேண்டியிருந்தது. வயல் வெளிகளுக்குள்ளாக நடந்து சென்றோம். நன்றாக விளைந்திருந்தவயலை யானை அழித்திருந்தது. அறுவடை செய்யாமல் இப்படி அழிந்திருக்கும் வயல் வெளிகளைப் பார்க்கும் போது வயிறு பற்றி எரிந்தது. எனக்கே இப்படியென்றால் சொந்தக்காரனுக்கு எப்படிஇருந்திருக்கும்? ஏன் இந்த வயல்கள் அறுவடை செய்யப்படவில்லை? என்று கேட்டேன். சுதந்திரமாக மனிதர்கள் நடமாட முடியாத நிலையில், வயல்கள் அறுவடை செய்யப்படவில்லை. இராணுவத்துக்குப் பயந்து வயல் பக்கம் மக்கள் செல்லவில்லை என்றார். இராணுவத்துடனான மோதல்கள் தொடருகின்றனவா? என்று கேட்டேன். என்ன நடந்தாலும் அது மட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். கடந்த 22ஆந் திகதி கூட சிங்கபுர முகாமிலிருந்து கண்டக்காடு முகாமுக்கு சென்ற இராணுவத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றும் பத்து றைபிள்களும் உருப்படியாகக் கிடைத்தன என்றார்.

கண்டக்காடு பொலனறுவை மாவட்டத்திலல்லா இருக்கிறது. நானும்தான் அடிக்கடி கேள்விப்படுகிறேன். அநுராதபுரம் மாவட்டத்தில் தாக்குதல் நடக்கிறது பொலனறுவை மாவட்டத்தில் தாக்குதல் நடக்கிறது என்று, பதுமனும் நீங்களும் ஏதோ தீர்மானம் எடுத்திருக்கிறீர்கள் போல இருக்கிறது. நான் அறிந்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தான் தமிழீழம் என்று எண்ணியிருக்கிறேன், நீங்களோ பொலனறுவை மாவட்டத்திலும், அநுராதபுரம் மாவட்டத்திலும் தாக்குதல் நடத்துகிறீர்கள். ஈரோஸுக்குபதுளை தேவைப்பட்டது போல உங்களுக்கு இந்த இரண்டு மாவட்டங்களும் தேவைப் படுகின்றதோ? என்றேன். சிரித்தார்.

''அப்படியில்லை. இராணுவமோ, குடியேற்றமோ நாம் அதைத்தேடிப் போகாவிட்டால் அவை நம்மைத்தேடி வரும். தமிழீழம் எமது சொந்தநாடு, எமது நாட்டிற்குள் சிங்களவன் அத்துமீறும் போது நாமும் எல்லைதாண்டுவது தவிர்க்க முடியாததாகின்றது. அனுராதபுரம் கண்டக்காடு பகுதி தமிழரின் பூர்வீக நிலம் தான். பொலனறுவையில் கூட இந்து ஆலயங்கள் இருந்திருக்கின்றன. கண்டக்காடு பகுதியை அண்டிச் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதால் இன்று நீங்கள் அதைச் சிங்களவருடைய பிரதேசமென்று எண்ணுகின்றீர்கள். காலப்போக்கில் மொறவேவா, சாலியபுர என்பதெல்லாம் சிங்களக் கிராமங்கள் என்று வேறு இடத்தில் உள்ள தமிழர்கள் சொல்லக்கூடும். ஏனெனில் அந்தப் பெயர்கள் பழக்கத்தில் வந்துவிடும். இராணுவத்தின் கொடுமைகளால் அந்த இடத்துக்குச் சொந்தமான மக்கள் வேறு இடங்களில் குடியமரும் போது இப்படியான நிலை தோன்றும் தான்'' என்றார்.

பொதுமக்களின் நிலை என்னமாதிரி என்று கேட்டார் மாத்தயா. நாளாந்தம் சராசரியாக இருபது, முப்பது என்று செத்துக்கொண்டே இருந்தபடியால் அகதிமுகாம் வாழ்க்கை வாழ்ந்து நாளாந்தம் அழிவதைவிட முகாம்களைவிட்டு வெளியேறி அவரவர்களுக்கு வசதியான இடங்களில் குடியமருங்கள் என்று மக்களிடம் சொல்லி விட்டோம் என்றார். இவ்வளவு மக்களும் முகாம்களை விட்டு வந்தால் அவர்களால் சமாளிக்க முடியுமா? என்று கேட்டேன். ''வேறென்னவழி. முஸ்லிம் ஊர்காவற்படையின் கொடுமை அதிகரித்து வருகிறது. மக்களை வெட்டிக் கொல்கிறார்கள். பெண்களைக் கற்பழிக்கிறார்கள். கற்பழிக்கப்படும் பெண்கள் உயிரோடு விடப்படுவதில்லை. இவ்வளவு காலமும் கலவரம் நடந்ததுதான். தமிழ்ப் பெண்களைக் கற்பழிப்பதும் கொலை செய்வதும் இப்போதுதான் ஆரம்பித்துள்ளது. அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள். இனி நாம் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் பிரச்சினை. அதற்கு முடிவெடுத்தாக வேண்டும்'' என்றார். இயக்கத்தில் நிறைய முஸ்லிம் இளைஞர்கள் இருந்தார்களே! அவர்கள் இது தொடர்பாக என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்? என்றேன். ''இயக்கத்தில் இருந்தவர்கள் இருவகை, ஒருசாரார் வேண்டுமென்றே ஊடுருவியவர்கள். அவர்கள் சண்டை தொடங்கியதுமே ஆயுதங்களுடன் ஓடிவிட்டார்கள். அவர்கள்தான் இன்று தமிழரைக் கொல்வதில் தீவிரமாயிருக்கிறார்கள். அடுத்தவர்கள் விசுவாசமாகவே இயக்கத்துடன் இருந்தவர்கள். இந்தச் சண்டையில்கூட இராணுவத்துடன் மோதி உயிரிழந்துள்ளார்கள். ஒட்டமாவடியில் நிகழ்ந்த தாக்குதல், களுவாஞ்சிக்குடியில் நிகழ்ந்த தாக்குதல் எல்லாவற்றிலும் முஸ்லிம் போராளிகள் களத்தில் இறந்துள்ளார்கள். இராணுவம் பிரதான பாதையினுள் நுழையவிருந்த சமயத்திற்தான ஜெட்வேகத்தில் நிலைமை மாறியது என்றார்.

''நிலைமைக்கேற்ற மாதிரி மாறி விட்டார்கள் என்று கருதுகிறீர்களா?'' என்று கேட்டேன். ''இல்லை, ஏற்கனவே வகுத்த திட்டம் செயற்படத் தொடங்கியது'' என்றார். ''என்ன அது?'' என்றேன். ''எல்லாக் கிராமங்களிலும் இருந்த பள்ளிவாசல்கள் ஒரேநாளில் இயக்கத்தில் இருந்த முஸ்லிம் இளைஞர்களைக் கூப்பிட்டுக் கதைத்தன. அதைத் தொடர்ந்து அனைவரும் உடனே விலகி விட்டார்கள். இதன் பின்னணி மிகப் பயங்கரமானது'' என்றார். என்ன அது? என்றேன்.

(தொடரும்)

> இராணுவமோ, குடியேற்றமோ நாம் அதைத் தேடிப் போகாவிட்டால் அவை நம்மை தேடி வரும்.
>
> மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தளபதி கருணா



## உடற்கல்விக் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தின் உடற்கல்விப் பிரிவினால் குறுகியகால பாடத்திட்ட உடற்கல்வி கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18-11-90) வேலணை கோட்ட ஆசிரியர்களுக்கு வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். உடற்கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (15)

## கோட்டைத் தாக்குதலில் தப்பிய சிப்பாய் பேட்டி:

# என்னுடன்படகில்வந்த6படையினர் ஒரே ஷெல்லில் கொல்லப்பட்டனர்

(கொழும்பு)

''ஒரேஷெல்லில்என்னுடன் வந்துகொண்டிருந்த நான்கு இராணுவத்தினர் கொல்லப் பட்டனர். இருவர் படுகாயம் அடைந்தனர். நான் மட்டும் தெய்வாதீனமாக உயிர் தப்பி னேன்.'

இவ்வாறு யாழ். கோட்டை முற்றுகை முறியடிப்பில் ஈடு பட்டு பின்வாங்கிய சிறிலங்கா சிங்களச் சிப்பாய்களில் ஒருவர் சிங்களப்பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித் துள்ளார்.

இவர் யாழ் கோட்டை முற்றுகை முறியடிப்பின் போது தனக்கு நேர்ந்த அவலம் பற்றிக் குறிப்பி கையில்; தன்னுடன் மொத்தம் ஏழு சிப்பாய் கள்சிறியரகபீரங்கிப்படகு ஒன்றில் மண்டைதீவில் இருந்து யாழ். கோட்டையை நோக்கி முன்னேறும்போது விடுதலைப் புலிகளின் ஷெல் ஒன்று எமது படகை நோக்கிப் பாய்ந்து நான்கு சிப்பாய்களை பலி கொண்டது. இருவர் படுகாய மடைந்தனர். நான் கடலில் பாய்ந்து உயிர்தப்பிக்கொண் டேன். காயமடைந்த இரு சிப் பாய்களும் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மனிதநேயஉணர்வுடன் அவர் களைக் காப்பாற்றும் நோக்குடன் படகைக் கைவிட்டுக் கயிறு ஒன்றின் உதவியுடன் அவர்களைமீட்டு பின்வாங்கிக் கரைசேர்ந்த சமயம் அந்த இரு சிப்பாய்களின் உயிர்களும் பிரிந்தன.

அவர் தொடர்ந்து கூறும் போது தமதுபடகின்பின்னால் கோட்டை இராணுவத்தின ருக்கென இருபத்தைந்து மூடை அரிசியுடன் வந்து கொண்டிருந்த படகு உட்பட தனது கண்முன்னாலேயே இராணுவத்தினரின் பதினாறு சிறியரக படகுகள் புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட தாகக் கூறியுள்ளார். (க

இன்று முதல்

## தெல்லிப்பளை வைத்தியசாலை மானிப்பாயில் இயங்கும்

(மானிப்பாய்)

இன்று நண்பகல் 12 மணி முதல் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனை மானிப் பாயில் செயற்படத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தகால சிறிலங்கா இராணுவத்தின் கண்மூடித்தனமான பொம்மர், ஹெலி, ஷெல் தாக்குதல்களைஅடுத்து தெல்லிப்பளை அரசினர் மருத் துவமனை பாதுகாப்புக் கருதி சங்கானை அரசினர் மருத்துவ மனைக்கு இடமாற்றம் செய் யப்பட்டது யாவரும் அறிந்ததே. சங்கானை மருத்துவ மனையில் போதிய இடவசதி கள் இல்லாத காரணத்தால் அங்குதெல்லிப்பளைமருத்துவ மனையின் சகல பிரிவுகளையும் மாற்றமுடியாத நிலையில் மனநோயாளர் பிரிவுமட்டுமே செயற்பட்டது. அங்கு அவர்களுக்குப் பூரண பாதுகாப்பும், பராமரிப்பும் மேற்கொள்ள முடியாதநிலைகாணப்பட்டது

இன்று நண்பகல் 12 மணி முதல் மனநோயாளர் பிரிவு வெளிநோயாளர் பிரிவு, வைத்திய சாலையில் நோயாளரை அனுமதித்தல் போன்ற பிரிவு கள் இங்குஆரம்பமாகும்எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## இடம் பெயர்ந்த கிழக்குமாகாண

## அரச கூட்டுத்தாபன ஊழியர் சங்க ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

''கிழக்குத் தமிழர் காட்டில் — அங்கு எப்படிச் செல் வோம் நாங்கள்'' ''கிழக்கில் நமக்கு உத்தியோகம்—எமது உயிருக்கு எங்கே உத்தரவாதம்.'' சிங்களஅரசஊழியர்க்கு உரிமை — தமிழ் ஊழியர்க்கு கொடுமை.'' போன்ற சுலோகங்கள் நேற்று கிழக்குமாகாணத்திலிருந்துஇடம்பெயர்ந்த அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் தனியார்துறை ஊழியர் களின் சங்கம் நடாத்திய ஊர் வலம் ஒன்றில் கொண்டு செல் லப்பட்டபதாகைகளில் காண ப்பட்டன

இந்த ஊர்வலம் நேற்று பகல் பதினொருமணியளவில் நல்லூர் சாதனா பாடசாலை யில் ஆரம்பித்து யாழ் செய லகத்தில் முடிவடைந்தது. வடக்குகிழக்கு மாகாண செய லாளர், பொது நிர்வாக மாகாணசபை உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஆகியோர் உட்பட ஐ.நா.தொழிற்பிரிவு, சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச தொழில் அமைப்பு (ஐ.எல்.ஓ) ஆகிய சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் யாழ் அர சாங்க அதிபர் ஊடாக அனுப் புவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. இந்த மகஜரைஉரிய இடங்களுக்கு அனுப்புவதாக மேலதிக அரச அதிபர் உறுதி கூறியதாக இச் சங்கத்தின் தலைவர் மகஜர் கையளிக்கப் பட்டபின் நடந்த கூட்டத் தில் தெரிவித்தார்.

1ஆம் திகதியிலிருந்து நிவாரணம்

மகஜர் கையளிப்பு வைப

வத்தைத் தொடர்ந்து நடை பெற்ற கலந்துரையாடலில் எதிர்வரும் டிசம்பர் 1 ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு கிழக்குமாகாண அரசாங்க ஊழியர்களுக்கும் உலர் உணவு நிவாரணம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளதாக அக்கூட்டத் தில் தெரிவிக்கப் பட்டது. (லோ)

## ஒருநாள் சம்பளஉதவி

(வேலணை)

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்று வரும் சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளாலும் ஊர்காவற் படையினரின் அட்டூழியங்களாலும் அகதிகளாக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்துள்ள வர்களுக்கென வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தில் கடமையாற்றும் ஊழி யர்கள் அனைவரும் தங்களது ஒருநாள் சம்பளத்தை இவர் களுக்குக் கொடுப்பதற்கு முன் வந்துள்ளனர். (14)

காரைநகரில்

கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் மிதி வெடிகளில் சிக்கிய கடற்படையி னர் தமது கால்களை இழந் துள்ளனர்.

உயிரிழந்த, கால்களை இழந்த கடற்படையினரைப் பின்வாங்கிச் சென்ற கடற் படையினர் தூக்கிச் சென்ற னர். இத் தாக்குதலில் கடற் படையினரிடம் இருந்து றம் மகசீன் 4, ஐ எம்.ரவை 150, கிற்பாக் 1 என்பன கைப்பற் றப்பட்டன. (மு)

அகதி முகாமில்

சேர்ந்த கனகசிங்கம் (வயது 33) என்பவர் உட்பட தந் தையும் அவரது இரு பிள்ளை களையும் கைது செய்துள்ள னர். இவர்களுக்கு என்னகதி நேர்ந்தது என்பது பற்றிய விபரம் தெரியவில்லை.

தடுப்பு முகாம் பாணியி லான இந்த அகதி முகாமில் ஆலங்கேணி, பன்குளம் பகுதி மக்கள் அரச படையினரால் பலவந்தமாக தடுத்து வைக் கப்பட்டிருந்தனர். இதே முகாமில் கடந்த மாதம் 23ஆம் திகதி 33 தமிழ் மக் கள் இவ்வாறு கைது செய்யப் பட்டு உவர்மலை இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டு அங்கு சுட்டும், வெட்டி யும் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இதேபோல கடந்த ஏழாம் திகதி அறுபது தமிழ் மக்கள் இராணுவத் தினராலும், முஸ்லிம் ஊர் காவற்படையினராலும் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்

கிராமங்கள்

(வயது 36), ச. கமலராணி (வயது9), மோகனாம்பாள் (வயது 14), இ. முருகதாஸ் (வயது 9), இ. செல்லம்மா (வயது 33) மா. ரவிக்குமார் (வயது 17) ஆகியோர் படுகா யமடைந்துள்ளனர்.

கோவளம், ஆலடி, சின்ன ஆலடி, வியாவில் ஆகிய பல இடங்களிலும் ஷெல் குண்டு கள் வீழ்ந்து வெடித்தன. சில பகுதிகளில் இருந்து பலர் இடம்பெயர்ந்து செல்வதை யும் அவதானிக்க முடிந்தது.

வியட்நாம்

டார நாயக்கா இவ்வாறுகுறி ப்பிட்டார். முன்னதாக மன் னார்த்தீவு இராணுவத்தின் முற்று முழுதான கட்டுப்பாட் டின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டது என பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா குறிப்பிட்டி ருந்தார்.

இதற்கு பதில் அளிக்கும் முகமாக பேசிய அநுரா பண் டார நாயக்கா 15 வருடங்க ளுக்கு முன்னர் வியட்கொங் கெரிலாக்கள் வியட் நாமில் இருந்து அமெரிக்கர்களை விர ட்டியடித்ததைப் போலவே தமிழீழ விடுதலைப் புலிகளும் போராடுகிறார்கள் என அவர் அரசாங்கத்தை எச்சரித்தார்.

மேலும் அவர் பேசுகையில் இன்றைய முஸ்லிம்களின் பிர ச்சினைக்கு சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பல வழிகளில் குற் றஞ்சாட்டப்படவேண்டியவர். அவர் அரசியல் நோக்கங்களு க்காக வெவ்வேறு சந்தர்ப்பங் களில் வேறுபட்ட கோரிக்கை களை முன்வைப்பார். அவர் ஒரு தந்திரமான அரசியல் வாதி எனவும் குறிப்பிட்டார்.

அதே போல அரசாங்கமும் அஷ்ரப் முஸ்லிம்களை தூண் டிவிடுகின்றார் என்பதைக் கண்டதும் அவர் மீது நடவ டிக்கை எடுக்காது விட்டுள் ளது. அதனால் ஐ. தே. கட்சி அரசாங்கமும் இதற்குப் பொ றுப்பு வகிக்க வேண்டும் என வும் குறிப்பிட்டார்.

லப்பட்டனர். இவர்களும் இராணுவத்தினராலும், ஊர் காவற்படையினராலும் படு கொலை செய்யப்பட்டிருக்க லாம் என அஞ்சப்படுகிறது. நாளாந்தம் இச் சம்பவங்கள் தொடர்வதால் முகாமில் எஞ்சியிருக்கும் மக்கள் பீதி அடைந்த நிலையில் வாழ்ந்து வருகின்றனர். (க)

## வேங்கைகளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்துட னான மோதலில் வீரமரணம டைந்த வேங்கை முஸ்தபா வின் புகழுடல் இன்றுகாலை 9 மணிமுதல் 11 மணிவரை மகாத்மாஜி சனசமூக நிலை யத்திலும், புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரியிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு சிறுப்பிட்டிவரை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு நீர்வேலி ஊடாக கோப்பாய் சந்தியை அடைந்து மாவீரர் மயான த்தை அடையும்.

இதேபோல் வீரவேங்கை கண்ணனின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக சுழிபுரம் மத்தி நாவலர் சனசமூக நிலையத் தில் காலை 9 மணிமுதல் 11 மணிவரை வைக்கப்பட்டு சித் தன்கேணி ஊடாக ஊர்வல மாக எடுத்து வரப்பட்டு மானிப்பாய், மருதனாமடம் ஊடாக கோப்பாய் மாவீரர் மயானத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்படும்.

இதேவேளை மறைந்த வீர வேங்கை அமலனின் புகழுடல் நேற்றுப் பிற்பகல் 4மணி முதல் 5 மணி வரை ஆனைக் கோட்டை மகாஜனா சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஆனைக்கோட்டைசந்தி,குளப் பிட்டி, கே. கே. எஸ். வீதி கோண்டாவில், ஸ்ரேசன் வீதி ஊடாக கோப்பாய் மாவீரர் மயானத்தில் நேற்று இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

## இயக்குனர் சபைக் கூட்டம்

(நீர்வேலி)

யாழ். பகுதி சிக்கன சேமிப்பு சங்கங்களின் சமாச இயக்குனர் சபை கூட்டம் அதன் நீர்வேலி தலைமைக் காரியா லயத்தில் நாளை சனிக் கிழமை முற்பகல் 10.00 மணி க்கு நடைபெறும் சகல இயக் குனர் சபை அங்கத்தவர்க ளும் அழைக்கப்படுகின்றனர்.

## குண்டுவீச்சு; ஒரு படை பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணு வத்தினர் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்கு தல் நடத்தியதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தி னர் ரோந்து நடவடிக்கை யைக் கைவிட்டுப் பின்வாங் கிச் சென்றனர். (க)

## விசாரணைகள் ஒத்திவைப்பு

மாவீரர் நாள் கொண்டா டப்படும் முகமாக 21.11.90 லிருந்து 27.11.90 வரை தமி ழீழ இணக்கமன்றுகளின் சகல விதமான விசாரணைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இத் தினங்களில் வரும் விசா ரணைகள் 27.11.90 ஆம் திகதிக்கு அடுத்து வரும் விசாரணைத் திகதிகளில் விசாரிக்கப்படும் என விடுத லைப் புலிகள் மக்கள் முன் னணி இணக்கமன்று பிரிவு அறிவித்துள்ளது.

இணக்கமன்று உறுப்பினர்க ளும், பொறுப்பாளர்களும் இக் காலத்தில் மாவீரர் நாள் நிகழ்ச்சியில் கலந்து ஒத்து ழைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மகாவலி

மகாவலி குடியேற்றத்தில் குடியமர்த்துவதற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல்லா யிரக்கணக்கான விண்ணப்பங் கள் தமக்குக் கிடைத்திருக்கின் றன என்றும், மாத்தறை, காலி' களுத்துதுறை மற்றும் அம்பாந்தோட்டைப் பகுதி யில் இருந்து மேலும் 2000 பேரை இன்னும் மூன்று மாத காலத்தில் தெரிவு செய்து குடியமர்த்துவதற்காக அனுப்பிவைப்போம் என்றும் தெரிவித்தார்.

குடியேற்றப்படும் இவர்க ளுக்கு பாதுகாப்பின்மையே காணப்படுகின்றது ஆனாலும் அவர்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பளிக்கும் என்றும் இந்தக்குடியேற்றத்தில் குடிய மர்த்தப்படுவோருக்காக 27 கோடியே 50 லட்சம் ரூபா வரை தமது அமைச்சு செல விட்டிருப்பதாகவும் அவர் கூறி னார்.

கொடிகாமத்தில்

சுமார் இரண்டு மணித்தியா லங்கள் சுழன்று சுழன்று தாக் கின. இதனால் நாவற்காடு, குடமியன் கொடிகாமம், கச் சாய் போன்ற இடங்கள் தாக்குதலுக்குள்ளாகின.

இதில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. பொது மக் கள் நால்வர்காயமடைந்தனர்

அவ்ரோ போட்ட பீப்பாய்க் குண்டுகள் சில வெடிக்க வில்லை. இந்தக் குண்டுகளை விடுதலைப்புலிகள் மீட்டனர்.

6 இராணுவ

தல்களைப் புரிந்து அந்தப் பகுதிகளில் அழிவு நடவடிக் கைகள் ஆரம்பித்த பின் விடு தலைப் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதல் இதுவாகும்.

ஊர்காவற்படை கல்முனைக்கு ஓடியது

விடுதலைப் புலிகள் நடாத் திய இந்தத் தாக்குதலால் இராணுவத்தினரின் பாது காப்பில் இருந்து கொண்டு சென்றல் காம் பகுதியைச் சூழ்ந்த தமிழ் இராமங்களில் அட்டகாசம் செய்து வந்த முஸ்லிம் ஊர்காவற் படையி னர் கல்முனைப் பகுதி வரைக்கும் ஓடியதாக அங்கி ருந்து எமக்கு நேற்று மாலை கிடைத்த செய்திகள் தெரி விக்கின்றன.

இந்தப் பகுதியில் இருந்து இராணுவத்தாலும், முஸ்லிம் ஊர்காவற் படையாலும் இம் சைகளுக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்கள் தம்பலாவத்தை மண்டூர் பகுதியில் அகதிக ளாக்கப்பட்டு விரட்டப்பட் டிருந்தனர் என்பது குறிப்பி டத் தக்கதாகும்.

கடந்த வாரம் கொழும் பில் நடைபெற்ற பத்திரிகை யாளர் மகாநாடொன்றில் சிறிலங்கா பாதுகாப்பு இணை யமைச்சர் ரஞ்சன் விஜே ரத்னா கிழக்கு மாகாணம் பற்றி ஒரு கருத்து தெரிவிக் கும்போது தற்போது கிழக்கு மாகாணத்தில் நூறு வீதமான பகுதியும் இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ளது என்று பெருமை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

இந்த ஆறு காவல் அரண் கள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலி கள் அதிநவீன, பெறுமதி வாய்ந்த ஆயுதங்கள் பல வற்றை கைப்பற்றியுள்ளனர். அவற்றின் பெயர் விபரம் வருமாறு:

60 எம். எம். மோட்டார் 1 இதற்கான ஷெல் - 1, எஸ். எல். ஆர் - 1, 84 எஸ் ஐ. -1, நைற் விசன் - 1, ஏ. கே. மகசீன் - 3, ஐ. எம். ரவைகள் -1600, நேற்ரோ ரவைகள் -1.5, ஏ. கே. கோல்சர் - 3, 5 56 ரவைகள் - 140, பரா ஷெல் - 5, ஜே. ஆர். கைக் குண்டு - 1, மில்டறி பெல்ற் -3, சப்பாத்து - ஒரு சோடி, தொப்பி - 3, கிற்பாக் - 1, தலைக் கவசம் - 5

சேதம் எதுவுமில்லை

ஆறு இராணுவ நிலைக ளையும் கைப்பற்ற நீண்ட நேர மோதல் நடைபெற்ற போதிலும் விடுதலைப் புலி கள் தரப்பில் எதுவித சேத மும் ஏற்படாது இத் தாக்கு தலை வெற்றிகரமாக முடித் திருப்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக் கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.